1975 ஏப்ரல் 19]

திரு. சு. துரைசாமி: தமிழ்நாடு முழுவதிலுமுள்ள நகர சபை பள்ளிக்கூடங்களில் தலைமை ஆசிரியர்கள் பற்றி அண்மையில் இன்ஸ்பெக்டர் அவர்களால் யார், யார் தலைமை ஆசிரியர்கள் என்று ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. திருப்பூரில் ஒரு உயர்நிலைப் பள்ளிக் கூடத்தில் ஐந்து ஆண்டுகளாக ஒருவர் ஹெட் மாஸ்டராக வேலை பார்த்து வந்தார்கள். இன்று அவர் ஹெட் மாஸ்டர் பதவியிலிருந்து கீழே இறக்கப்பட்டிருக்கிருர்கள். ஆகவே ஐந்து ஆண்டுகள் யாராவது ஒருவர் ஹெட் மாஸ்டராக வேலை பார்த்திருந்தால் அவர்களுக்கு பாதிப்பு இல்லாத அளவிற்கு அமைச்சர் அவர்கள் உத்திரவு பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: இது ஒரு பொதுவான கேள்வி. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு பிரச்னைபற்றிக் கூறுகிருர்கள். ஆகவே அவர்கள் அதுபற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. என். டென்னிஸ்: ஹெட் மாஸ்டரை நியமிப்பது நகரசபை நியமனக் கமிட்டி. ஆகவே அவர்களே ஹெட் மாஸ்டர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஏற்கனவே இல்லை என்று குறிப்பிட்டேன். மாநில அளவில்தான் செய்ய முடியும்.

திரு. கோ. இளங்கோவன்: அரசாங்க ஊழியர்களுக்கு ஆண்டுதோறும் அரசு ஊதியத்தை உயர்த்திக் கொண்டே போகிறது. எனவே இப்போது ரூ. 300 என்று நிர்ணயித்திருப்பதை ரூ. 400 என்று உயர்த்துவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இது புதிய யோசனை. பிறகு பார்க்கலாம்.

மானுமதுரை குடிநீர் வழங்கு திட்டம்

*734 வினு— திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானுமதுரை பேரூராட்சி குடிதண்ணீர் திட்ட வேலை இப்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. சோனையா : இராமனுதபுரம் மாவட்டத்தில் இருக்கிற மானுமதுரையைப் பொறுத்தவரையில் பல ஆண்டு களாக கேட்டுக் கொண்டு வரப்படுகிற அந்தத் திட்டம் இப்போது நிறைவேறுகிற தருவாயில் இருக்கிறது. அந்தக் குடி நீர் திட்டத்தை இப்போது வறட்சி நிலை இருப்பதால் உடனடியாகச் செயல்படுத்துவதற்கு அரசு எற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கான நிர்வாகச் செலவு, மற்றச் செலவுகள் எல்லாம் நகரமன்றம் ஏற்றுக் கொள்வது போன்ற பிரச்னைகள் எல்லாம் இப்போது குடி நீர் வாரியத்திற்கு வந்து மறுபடியும் சர்க்கார் ஆணைக்கு வந்த பிறகு அதைப்பற்றியெல்லாம் பரிசீலித்து எவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுக்கமுடியுமோ அந்த அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Semmarikulam Therikudieruppu road

*735 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to blacktop the Semmarikulam Therikudieruppu road (*via*) Solaikudieruppu and Kudiraimedu in Tiruchendur taluk ; and

(*b*) if so, when the work will be started ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : இந்தச் சாலை மிகவும் முக்கியமான பல கிராமங்களை தொடர்புபடுத்தக்கூடிய சாலை. ஆகவே, இதை விரைவில் தார் போடுவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது நாலரை லட்சம் ரூபாய்க்கு மேல் ஆகிற இனமாக இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு இதை எடுப்பதற்கான உத்தேசம் இல்லை. இதை பின்னால்தான் பார்க்கவேண்டும்.